<u>அருப்புக்கோட்டை நகராட்சி</u>

**விளம்பி ஆண்டு சித்திரை மாதம் நாள் : 15.05.2018 வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :— திருமதி.ரா.ஜெகதீஸ்வரி**

**தனி அலுவலர்**

**பொருள் 1 :** மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 129/செம.தொ. அ/18 நாள் 20.02.2018ன் படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்ற 2017—18 ம் ஆண்டுக்கான வளர்ச்சி திட்ட பணிகளை ஓராண்டு சாதனை மலர் மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய விளம்பரக் கட்டணத்தொகை ரூ.16800/— ஐ மாலை முரசு நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2425/2018/ இ 1

**<u>தீர்மானம் :</u>**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.414</u>**

**பொருள் 2 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் புதியதாக மைக்ரோ கம்போஸ்ட் யார்டுகள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.94.00 இலட்சத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018—19 ன் கீழ் முழுமான்யநிதி பெறுவதற்கான திட்டவிபரத்தினை உரிய நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் மூலம் சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 7 | இரயில்வே பீடர் ரோடு கிழக்கு 1வது தெரு பகுதியில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு கட்டும் பணி | 48.00 |
| 2. | 32 | அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு கட்டும் பணி | 46.00 |
| | | **மொத்தம்** | 94.00 |

ந.க.எண்.4453/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.415</u>**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட திருச்சுழி ரோடு வார்டு ஜி, பிளாக் 13 நகரளவு எண் 8/5A (சர்வே எண் 86/5A) ல் 0.85 ஏக்கர் (3439.82 ச.மீ.) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78, 172 H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி S.G.விஜய்குமரன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 57/2018 நாள் 02.02.2018ல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடத்தினை ஆவண எண் 1459/2018 நாள் 05.04.2018ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூங்காக்களை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1544/2018/ எப்1

**<u>தீர்மானம் :</u>**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.416</u>**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சி ஆடுவதைக் கூடம் புதுப்பிப்பதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.389 நாள் 28.03.2018ன்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து இசைவாணை பெறுவதற்கான கட்டணத்தொகை ரூ.13800/— அனுமதிபெறப்பட்டது.

ஆனால் தற்போது 09.04.2018 தேதிய தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அரசாணை எண் 40ன்படி கூடுதல் தொகை நிர்ணயம் செய்துள்ளதின்படி மொத்தத்தொகை ரூ.20,000/– கட்ட வேண்டியுள்ளதால் ஏற்கனவே மன்றத்தில் அனுமதி பெறப்பட்ட தொகையினை விட கூடுதல் தொகையாக ரூ.6200/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2078/2018/ எச்2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.417**

**பொருள் 5 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு DBC மஸ்தூார் பணியாளர்கள் 80 நபர்களை தினக்கூலி அடிப்படையில் 01.06.2018 முதல் 31.08.2018 வரை 90 நாட்களுக்கு பணியமர்த்த நாள் 1க்கு ரூ.194/– வீதம் ஆகும் செலவுத் தொகை ரூ.9,62,240/– தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5473/2016/ எச்2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.418**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அருப்புக்கோட்டை கிராமம் வார்டு F பிளாக் 3, டி.எஸ்.எண்.8/2ல் மற்றும் 4/2பி(சர்வே எண் 225/2,231/2எ)ல் 3.08 ஏக்கர் (12464.32ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்.78,172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திருமதி.ஜெயலட்சுமி, க/பெ.சுப்புராஜீலு என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 56/2018 நாள் 02.02.2018ல் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடத்தினை ஆவண எண் 1301/2018 நாள் 20.03.2018 மற்றும் 3973/2015, நாள் 05.08.2015ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழுங்கப்பட்டுள்ளது மேற்படி சாலை மற்றும் பூங்காக்களை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.10349/2017/ எப்1

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.419**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பணியுரியும் அம்மா உணவகம் மற்றும் DBC பணியாளர்களுக்கு ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் EPF (Employee Provident fund ) யை Online ல் பதிவேற்றம் செய்வதற்கும் பணியாளர்களுக்கு புதிய கணக்கு எண் பெறுவதற்கும் மேலும் இது தொடர்பாக மேலாளர் மற்றும் ஆணையாளர் (பொ), அவர்களுக்கு Digital sing பெறுவதற்கும் SMK Associates, அவர்களிடமிருந்து வரப்பெற்ற கட்டணத் தொகை ரூ.21,000/– யை SMK Associates அவர்களுக்கு வழுங்கவும் மன்றம் அனுமதி வழுங்கலாம்.

ந.க.எண்.123/2018/ பி2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.420**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து (வைகை குடிநீர் திட்டம், Local Source) அருப்புக்கோட்டை வரை உள்ள 43.65 கி.மீ. நீளத்திற்கு போடப்பட்டுள்ள 18" RCC Pipe, 15" RCC Pipe, 12" RCC pipe மற்றும் 18" CI pumping main–களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் மற்றும் அருப்புக்கோட்டை நகர்பகுதிகளில் வார்டு 1 முதல் 36 வரை குடிநீர் விநியோகத்திற்காக போடப்பட்டுள்ள பகிர்மான குழாய்களின் மொத்த நீளம் 105.00 கி.மீ. மேலும் PVC மற்றும் CI பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான ஆண்டு பராமரிப்புக்கான (மே 2018 முதல் மார்ச் 2019 வரை) உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7,00,000/–ஐ குடிநீர் வழுங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4893/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள் அங்கீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.421</u>**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அலுவலகக்கட்டிடத்தில் (AMC) உள்ள 25 எண்ணம் குளிர் சாதன இயந்திரஙகளின் வருடாந்திர பராமரிப்பு பணி 2017–18ம் ஆண்டு முடிவடைவதால் அடுத்த 2018–19ம் வருடத்திற்கு பராமரிப்பு பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1,00,000/–ஐ நகராட்சி வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4337/2016/இ1

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள் அங்கீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.422</u>**

**பொருள் 10 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு போலிரோ வாகனஎண் TN67F9587 ல் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோ மொபைல் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.70,000/– வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 4804/2018/இ2

**<u>தீர்மானம் :</u>**
மன்றப்பொருள் அங்கீகரிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.423</u>**